# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.3-)**

**அசல் வழக்கு எண். 83/2020**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சதிஷ்குமார் | மாவட்டம் | கோவை தெற்கு |
| தந்தை பெயர் | ராஜேந்திரன் | கிராமம் | |
| பணி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகத்தில் பொறியாளராக பணியாற்றி வருகிறேன். நான் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் M.E. (Environmental Engineering) படித்துள்ளேன். நான், ஜுன் 2025 ம் ஆண்டு முதல் மேற்படி அலுவலகத்தில் பணியாற்றி வருகிறேன். வா.சா.ஆ.10 ல் உள்ள கடிதம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகாருக்கு கொடுத்த பதில் குறித்து தெரியுமா என்றால் புகார் 2020 ல் பெறப்பட்டுள்ளது. அதற்கான பதில் அலுவலக பதிவேட்டில் இல்லை. SMS HOLLOW BLOCK என்பது அரசிதழ் எண்.91/13.06.2025, 14 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டு வெள்ளை நிற வகையில் பட்டியலிடப்பட்டுள்ளது. **13.06.2025 தேதியிட்ட அரசிதழ் எண்.91 சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி அரசிதழின் படி 609 தொழில்கள் வெள்ளை நிற வகையில் உள்ளது. வெள்ளை நிற வகைப்பாட்டில் உள்ள தொழில் குடிசை தொழில் என்றால் இல்லை. SMS HOLLOW BLOCK ல் Fly Ash Bricks கலப்பதில்லை என்றும், சிமெண்ட் மற்றும் M-Sand மட்டும் கலக்கப்படுகிறது என்றால் சரிதான்.

மேற்படி தொழில் நடைமுறைக்கு Wet process என்றால் இல்லை. HOLLOW BLOCK தயார் செய்வது Wet process இல்லையா என்றால் பார்த்தால் தான் தெரியும். HOLLOW BLOCK தயார் செய்யும் நீர் இல்லாமல் தயார் செய்ய முடியாது என்றால் சரிதான். M-Sand எவ்வளவு மில்லி கிராம் இருந்தால் காற்றில் பறக்கும் என்றும், எவ்வளவு மில்லி கிராம் இருந்தால் காற்றில் பறக்காது என்றால் காற்றின் வேகம் மற்றும் காற்று மாசு தர அளவீட்டை பொறுத்து தான் சொல்ல முடியும். பாதிக்கப்பட்ட இடத்தில் மெஷினை வைத்து பரிசோதனை செய்யும்போது தான் தெரிய வரும். மேற்படி நிறுவனத்திற்கு license தேவையில்லை என்றால் மாசு கட்டுப்பாட்டு வாரிய இசைவாணை மேற்படி தொழிற்சாலைகளுக்கு தேவையில்லை.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. வா.சா.ஆ.10 கடிதத்தில், பார்வை 2 ல், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு 17.05.2018 ல் கடிதம் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புகார்தாரர் ஏ.ஆர்.வேலுச்சாமி, 2/168 காவேரி நகர் விரிவு, கலங்கல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக HOLLOW BLOCK யை குடியிருப்பு பகுதியில் வைக்க முடியாது என்றால் குடியிருப்பு பகுதியில் 5 HP க்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் தொழிலுக்கு அனுமதியில்லை மற்றும் காற்றில் மாசு பரவ காரணமாக இருக்கும் தொழிற்சாலைகளினால் ஏற்படும் காற்று மாசு தர அளவீட்டின் படி தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுப்பது சம்மந்தமாக முடிவு எடுக்கப்படும்.

2. HOLLOW BLOCK தயார் செய்யும் போது, அதன் மூலப் பொருட்களான M-sand, P-sand, சிறு ஜல்லி மற்றும் சிமெண்ட் ஆகியவற்றை திறந்தவெளியில் இருப்பு வைக்கும்போது காற்றில் பறக்குமா என்றால் அந்த இடத்தை சுற்றி போதுமான தடுப்புகள் இல்லாத பட்சத்திலும், காற்றின் திசை மற்றும் வேகத்தை பொறுத்து அருகாமையில் உள்ள இடங்களுக்கு தூசு பரவ வாய்ப்புள்ளது. குடியிருப்பு பகுதியில் இருந்து தூசு பரவுவது சம்மந்தமாக ஏதேனும் புகார் வந்தால் அந்த இடத்தை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து வந்து பார்ப்போம் என்றால் எங்களிடம் அனுமதி தேவையில்லாத தொழிற்சாலைகளாக இருக்கும் பட்சத்தில் முதல் கட்டமாக உள்ளூர் அமைப்புகளுக்கு புகார் அனுப்புவோம். 2 ம் கட்டமாக புகார்

அதிக வீரிய தன்மை கொண்டதாக இருந்தால் அங்கு காற்று மாசு தர அளவீடு சோதனை மேற்கொள்வோம். வா.சா.ஆ.10 ஆவணத்தின் படி பார்த்தால், முதல் கட்ட நடவடிக்கை எடுத்தது போல் உள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

1. தூசு எவ்வளவு மைக்ரான் இருந்தால் பறக்கும் என்றால் காற்றின் வேகத்தை பொறுத்து பறக்கும்.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur